# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.17/2023 நாள் : 08.03.2023

**தனியார் அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள் மற்றும் தனியார் குடியிருப்புகள், வணிக வளாகங்களில் உரிய அனுமதி மற்றும் உரிய பாதுகாப்பு உபகரணங்களின்றி கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொண்டால் சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்போர் நல சங்கங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் மறுவாழ்வு ஆணையத் தலைவர் திரு.மா.வெங்கடேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தனியார் அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள் மற்றும் தனியார் குடியிருப்புகள், வணிக வளாகங்களில் உரிய அனுமதி மற்றும் உரிய பாதுகாப்பு உபகரணங்களின்றி கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொண்டால் சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்போர் நல சங்கங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் மறுவாழ்வு ஆணையத் தலைவர் திரு.மா.வெங்கடேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் மறுவாழ்வு ஆணையத் தலைவர் அவர்கள், பெருங்குடி மண்டலம், காமராஜர் நகர் 2-வது பிரதான சாலையில் உள்ள கிரீன் ஏக்கர்ஸ் அடுக்குமாடி குடியிருப்பில் இன்று (08.03.2023) ஆய்வு செய்தார். அப்போது, இக்குடியிருப்பு வளாகத்தில் 29.06.2022 அன்று கழிவு நீரகற்று பணிகளை மேற்கொள்ளும்பொழுது உயிரிழந்த திரு.பி.பெரியசாமி மற்றும் திரு.எம்.தட்சிணாமூர்த்தி ஆகியோர் உயிரிழந்த இடத்தையும், சோழிங்கநல்லூர் மண்டலம், காரம்பாக்கம், சப்தகிரி நகர், பாக்கியம் பிரகதி அடுக்குமாடி குடியிருப்பில் 08.02.2023 அன்று கழிவு நீரகற்று பணிகளை மேற்கொள்ளும்பொழுது திரு.எஸ்.செந்தில் குமார் உயிரிழந்த இடத்தையும் ஆய்வு செய்தார்.

ஆய்வுக்குப் பிறகு, அவர் தெரிவித்ததாவது:-

தனியார் அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள் மற்றும் தனியார் குடியிருப்புகள், வணிக வளாகங்களில் உரிய அனுமதி மற்றும் உரிய பாதுகாப்பு உபகரணங்களின்றி கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொண்டால் சம்பந்தப்பட்ட

உரிமையாளர்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்போர் நல சங்கங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய களப்பணியாளர்களின் மறுவாழ்வு நலன் குறித்து மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகள், செயல்படுத்தப்பட்டுவரும் நலத்திட்ட உதவிகள் குறித்தும், பணிப்பாதுகாப்பு உபகரணங்கள் குறித்தும் சென்னைக் குடிநீர் வாரியம் உரிய இடைவெளியில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து களப்பணியாளர்களையும் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தும் நிலையினை உறுதி செய்து களப்பணியாளர்களின் நலனில் அக்கறையோடு இருக்க வேண்டும். மேலும், உரிய கால இடைவெளியில் களப்பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் நடத்தப்பட்டு உயர் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு உடனடியாக அளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் கழிவுநீர் அகற்றும் பணிகளில் மனிதர்களை ஈடுபடுத்தக் கூடாது என உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவையும் மீறி யாராவது மனிதர்களைக் கொண்டு கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொண்டால் பொதுமக்கள் உடனடியாக **"சஃபாய் மித்ரா சுரக்க்ஷா சேலஞ்ச்"** திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட தேசிய உதவி எண்.14420-ல் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இது தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்திட குடிநீர் வாரியம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப. அவர்கள், தொழில் தொடர்பு மேலாளர் திரு.ஸ்ரீ.வெங்கடேசன், பகுதிப் பொறியாளர்கள் திருமதி.செ.சத்யா, திரு.மு.அருண்குமார் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்